1991 சனவரி 22]

''1990ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/1990) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

16-15 மணி

(இ) மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு 1991.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

'' 1991ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/1991) *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''

திரு. கே. ஆர். சுந்தரம்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் முன் மொழியப் பட்டிருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவில் என்னுடைய கருத்தை தெரிவிக்க விரும்புகிறேன். மாநகராட்சியில் உள்ள தனி அலுவலர்களின் ஆயுட்காலத்தை நீட்டிக்க வகை செய்வது என்பதை, அங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய நிலை இல்லாத காரணத்தால் அதை நீட்டிப்பதை, ஓரளவுக்கு நியாயம் என்று நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். அதே போல் உள்ளாட்சி மன்றங்களில் இட ஒதுக்கீடு சம்பந்தமாகக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற திருத்தத்தையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது. ஆனால் நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களினுடைய காலம் இந்த மார்ச் மாதம் 3-ந் தேதி முடிவடைவதையொட்டி ஏப்ரல் மாதம் 10-ஆம் தேதி தேர்தலுக்கு ஏற்பாடு செய்து, அதுவரையில் தனி அலுவலர் களை நியமனம் செய்து, அந்த வகையில் வைக்கப்பட்டிருக்கிற ஆலோசனையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக் கொள்ள வில்லை. எனவே அதை ஆட்சேபித்து எதிர்க்கிறோம் நாங்கள். ஏனென்றால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த அமைப்புகள் இருப்பதுதான் நல்லது. தமிழகத்தில் பல ஆண்டுகளாக இருந்த நிலைமை நமக்குத் தெரியும். 1979 முதல் 1986 வரையில்

---

* 21-1-1991ஆம் நாளிட்டதமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

1991 சனவரி 22] [திரு. கே. ஆர். சுந்தரம்]

உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் இல்லாமல் இருந்து, பிறகு அந்த உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்த வேண்டும் என்று கேட்டு, பல்வேறு இயக்கங்களை நடத்தி, உள்ளாட்சி மன்றங்களுக்கு 1986-ல் தேர்தல் நடத்தப்பட்டது. அப்படித் தேர்தல் நடத்தப்பட்ட நேரத்திலே கூட 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடத்த வேண்டும் என்றிருந்த முறையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு 4 ஆண்டு என்றும், 3 ஆண்டு என்றும் காலத்தை நிச்சயித்துத் தேர்தல் நடத்தினார்கள். ஆனால் கலைஞர் ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு அந்த 3 ஆண்டு என்பது 5 ஆண்டாக நிச்சயிக்கப்பட்டது. எனவே நமக்கெல்லாம் தெரியும். அந்த 5 ஆண்டுக் காலத்தில் நகராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஆகியோர் இருக்கிற காரணத்தால் அந்த மக்களுடைய அன்றாடத் தேவைகளை அறிந்து நல்ல முறையில் பணி செய்ய முடிந்தது என்பதை அறிவோம். அது நமக்கு ஐந்தாண்டு காலமாக ஏற்பட்ட அனுபவம். விளக்கு எரியவில்லை என்றால், தண்ணீர் வரவில்லை என்றால் கூட ஊராட்சி மன்றத் தலைவர்களை நகராட்சி மன்றத் தலைவர்கள் ஆகியோர் அதிகாரிகளைப் பார்த்துப் பேசி, அமைச்சர்களைப் பார்த்துப் பேசி காரியங்களை செம்மையாக நடத்த உதவிகரமாக இருந்து வந்திருக்கிறது.

ஆனால் அத்தகைய நிலைமைகள் இல்லாமல், தனி அலுவலர்கள் கையில் இந்தப் பொறுப்பை ஒப்படைப்பது என்பது மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக நிர்வாகத்தில் சீர்கேடு ஏற்படக் கூடிய ஒரு நிலைமையைத்தான் ஏற்படுத்தும். ஆகவே இந்த 15 வார காலத்தில், அதாவது தேர்தல் நடத்தப் படுகிற வரையில், இந்தத் தனி அலுவலர்களின் காலத்தை நீட்டிக்கிறோம் என்று சொல்கிற நிலைமைக்குப் பதிலாக ஊராட்சி மன்றத் தலைவர்களுடைய, நகராட்சி மன்றத் தலைவர்களுடைய காலத்தையே அந்தக் காலம் வரையில் நீட்டிப்பதற்கு நீங்கள் வகை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் இந்த ஜனநாயக முறைகளைப் பாதுகாக்க முடியும். இன்றைக்கு ஏப்ரல் மாதம் வரை என்று சொல்கிற காரணத்தால் ஏதோ தேர்தல் நடத்துவதற்கு முடியவில்லை என்று சொல்லி அல்லது சென்சஸ் எடுக்கிறோம், அதற்குக் காலம் வேண்டும் என்று சொல்கிற முறையில், ஏப்ரல் மாதத்தில் கூட தேர்தலை நடத்தாமல், தனி அலுவலர்களின் காலத்தையே நீட்டித்துவிடக் கூடிய ஒரு ஆபத்தான நிலைமை ஏற்படுவதற்கும் வாய்ப்பு ஏற்பட்டு விடும். ஆகவே அதற்கும் கூட சந்தர்ப்பம் அளிக்காமல், நாம் எல்லாம் தேர்தலைப் பார்த்துப் பயப்படுகிறோம் என்றெல்லாம் மக்கள் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்காமல் அந்த ஊராட்சி மன்ற, நகராட்சி மன்ற அமைப்புகளையே நீட்டிக்கக் கூடிய முறையில் அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எங்களுடைய கருத்தைக் கூறி அமைகிறேன்.

16-20 மணி

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, இந்த எம்.டி.எம். ஆக்ட் 1920 என்பதன்படி இந்தச் சட்டத் திருத்தத்தில் ஒரு மாதத்திற்கு எக்ஸ்டென்ட் பண்ணியிருக்கிறார்கள். ஏற்கனவே 1969-லே தான் தேர்தல் நடந்தது. 1969-லே நான் நின்று இருக்கிறேன். எனக்கு நன்றாகத் தெரியும்.

அதற்கு அப்புறம் எமர்ஜென்சி ஒன்று வந்திருக்கிறது. அது எல்லோருக்கும் தெரியும். சில பேர்களுக்கு, இளைய வயதினருக்கு அது தெரியாமல் இருக்கலாம். அது கடுமை யானது. நாட்டிலே எமர்ஜென்சி வந்தபோது, மத்தியில் காங்கிரஸ் இருந்தபோது, கவர்னர் கலைத்துவிட்டார். கலைத்ததில் இருந்து 1986 வரை தேர்தலே நடக்கவில்லை. அப்போதெல்லாம் பேசாமல்தான் இருந்தோம். அப்போது என்ன ஆயிற்று? முனிசிபாலிட்டி ஓடிப்போயிற்றா? பஞ்சாயத்து பறந்து போயிற்றா? இல்லை வேறு என்ன ஆயிற்று? ஒரு சங்கடமும் இல்லை. நன்றாகத்தான் நடந்தது. இப்போது இந்த ஒரு மாதம் எக்ஸ்டென்சன் பண்ணுவதற்கு எதிர்க்கட்சி என்ன சொல்கிறார்கள்? எதிர்க்கட்சித் தலைவர் அப்படி சொல்கின்றார்கள். அதையும் ஒத்துக்கொள்ளவேண்டியதுதான். அவருக்கு உரிமை இருக்கிறது, சொல்கிறார். இந்த ஒரு மாதம் எக்ஸ்டென்ட் பண்ணுவதற்கு சொல்கின்றார்கள். ஏதாவது விளக்கு எரியாமல் போனால் என்ன பண்ணுவது? குப்பை கூட்டாது போனால் என்ன பண்ணுவது என்றால் அதை நான் ஒத்துக்கொள்வதற்கில்லை. மறுபடியும், மறுபடியும் செய்கின்றார்கள். ஏற்கெனவே 3 வருடம் தான். அதை 4 வருடம் என்று ஆக்கினார்கள். இப்போது கலைஞர் வந்து மேலும் 2 வருடம் எக்ஸ்டென்சன் கொடுத்தார். அது நல்ல காரியம். அவர் செய்த காரியம் நல்ல காரியம். இதற்கு மேலேயும் எக்ஸ்டென்சன் கொடுத்தால் மக்கள் என்ன நினைப்பார்கள்? ஏதோ 92 முனிசிபாலிட்டிகளில் 76 முனிசி பாலிட்டிகள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கையிலே இருக்கின்றன. எனவே தங்களுடைய கட்சிக்காக, ஏதோ எக்ஸ்டென்சன் பண்ணியிருக்கிறார்கள் என்ற அளவுக்கு ஒரு அவச்சொல் வரும். அதற்காக இதை ஒரு மாதம்கூட எக்ஸ்டென்சன் பண்ணாமல், இதன்படி தனி அலுவலர்கள் நியமிப்பதை ஜனதா தள் சார்பிலே நான் வரவேற்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தைப் பொறுத்தமட்டில் அண்மையில் நகரியமாக இருந்து, நகராட்சி யாக உயர்த்தப்பட்ட அம்பத்தூர் நகராட்சி பற்றிய திருத்த

1991 சனவரி 22] [திரு. கோ. சி. மணி]

சட்டமுன்வடிவு. ஆகையினால், அடுத்து வருகிற நகராட்சி திருத்தச் சட்டமுன்வடிவில் நான் பதில் சொல்கிறேன். இதை நிறைவேற்றித் தருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 3/1991) நிறைவேற்றப்பெற வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஈ) மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த), சட்டமுன்வடிவு 1991.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர் மானத்தை மொழிகிறேன் :